ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
ජාතික ඇගයීම් හා පරීක්ෂණ සේවාව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
Department of Examinations, Sri Lanka
NATIONAL EVALUATION AND TESTING SERVICE

පැලවත්ත, බත්තරමුල්ල.
பெலவத்தை, பத்தரமுல்ல
Pelawatta, Battaramulla.

දුරකථන / தொலைபேசி / Telephones: 2786200, 2784201, 2785202, 2784203, 2784204, 2786205, 2784206,
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: 011-2785220
තැපැල් ලිපිනය / அஞ்சல் முகவரி / POSTAL ADDRESS: තැ.පෙ. 1503, කොළඹ / த.பெ. 1503 கொழும்பு / P.O.Box 1503 Colombo
අන්තර්ජාල ලිපිනය / இணையதள முகவரி / Internet Address: www.doenets.lk
E-mail : examd@sltnet.lk

මගේ අංකය / எமது இல / My No: 6/5/2023
ඔබේ අංකය / உமது இல / Your No: ..............................
දිනය / திகதி / Date: 2023.06.14

சகல பாடசாலை அதிபர்களுக்கும்,

**பாடசாலைக்கு மாணவர்களை தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை – 2023 விண்ணப்பப்படிவங்கள் பெற்றுக்கொள்ளல்**

மேற்படி பரீட்சையை 2023 ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்த்துள்ள பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான விண்ணப்பப்படிவங்களையும் அவற்றைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்களையும் பிரமாணங்களையும் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும். விண்ணப்பப்படிவங்கள் ஒப்படைக்கப்பட வேண்டிய இறுதித் திகதி **2023.07.06** ஆம் திகதி ஆகும்.

2. நிகழ்நிலை முறைமையில் (Online) மட்டும் விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து அதன் அச்சுப் பிரதியில் (Printout) வருமான மட்டம் தொடர்பாக விண்ணப்பதாரி, பெற்றோர் அல்லது பாதுகாவலரின் கையொப்பத்தைப் பெற்று இலங்கை பரீட்சைகள் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

3. விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்காக பின்வரும் வழிமுறைகள் மூன்றில் ஒன்றைப் பின்பற்ற முடியும்.

- இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ (www.doenets.lk) எனும் வலைத்தளத்தில் நுழைந்து "எமது சேவை" எனும் தலைப்பின் கீழுள்ள "நிகழ்நிலை விண்ணப்பங்கள் (பாடசாலைப் பரீட்சைகள்)" எனும் உபதலைப்பை Click செய்க. அல்லது
- பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ செல்லிடத் தொலைபேசி செயலியைப் (mobile application) பயன்படுத்தி "DoE" இற்குள் நுழைந்து "நிகழ்நிலை விண்ணப்பங்கள் (பாடசாலைப் பரீட்சைகள்)" எனும் தலைப்பை Click செய்க. அல்லது
- https://onlineexams.gov.lk/eic எனும் இணைப்பை Click செய்து நுழைக.

3.1 கிடைக்கப்பெறும் window இல் தங்களுக்கு இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள School Code அல்லது Password ஐ உள்ளடக்கி முறைமைக்குள் பிரவேசிக்கவும்.

3.2 Grade Five Scholarship – 2023 - Student Registration (School) எனும் தலைப்பை தெரிவு செய்வதன் மூலம் விண்ணப்பங்களைப் பூரணப்படுத்துவதற்கான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

4. இப்பரீட்சைக்காக நிகழ்நிலை முறைமையூடாக தரவுகளை உள்ளடக்கும்போது விண்ணப்பதாரருக்காக தனித்துவமான அடையாள எண் (Unique Identity Number) ஒன்று தரப்பட வேண்டும். அது பின்வருமாறு தயாரிக்கப்படல் வேண்டும்.

பரீட்சைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள பயநர் பெயருடன் (User Name) தொடர் இலக்கத்தையும் இணைத்து (கீழே தரப்பட்டுள்ள உதாரணத்திற்கமைவாக) 8 இலக்க குறியீடுகளை கொண்ட அடையாள எண்ணை உருவாக்க வேண்டும்.

அடையாள எண்ணைத் தயாரிக்கும் போது,
பயநர் பெயர் 0 இலக்கத்தில் ஆரம்பித்திருப்பின் (பரீட்சைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள பாடசாலை எண்) அடையாள எண்ணை உருவாக்கும் போது 0 இலக்கத்தை நீக்கி ஏனைய இலக்கங்களைப் பயன்படுத்துதல் வேண்டும்.

உதாரணமாக

I. பயநர் பெயர் (பரீட்சைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள பாடசாலை எண்) 04304 எனின் (4 இலக்கங்களை உடையதாயின்) விண்ணப்பதாரியின் தொடர் இல 1 எனின் 43040001 என அடையாள எண் அமைதல் வேண்டும்.

II. பயநர் பெயர் (5 இலக்கங்களை கொண்டுள்ள) 14129 எனின் விண்ணப்பதாரியின் தொடர் இல 1 எனின் 14129001 என அமைதல் வேண்டும்.

5. பாடசாலை தொலைபேசி இலக்கத்தை குறிப்பிடுவது அவசியமானதுடன் அதிபருடன் தொடர்பு கொள்ளும் பொருட்டு செல்லிடத் தொலைபேசி இலக்கத்தையும் பரீட்சைக்குப் பொறுப்பான ஆசிரியரது தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட வேண்டுமென்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

6. இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி பெறுகின்ற பிரமாணங்களுக்கமைய விண்ணப்பத்தை அனுப்பும் சந்தர்ப்பத்தில் அரசாங்கப் பாடசாலைக்கோ அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைக்கோ செல்லும் 5ம் தரத்தில் பயிலும் மாணவராக இருத்தல் வேண்டும். அவ்வாறாயினும் மாணவர் உதவிப்பணம் பெற்றுக்கொள்வதற்கு தகுதியுடையவர் 2024 ஜனவரி 31 ஆம் தினத்தில் 11 வயதுக்கு குறைந்த அல்லது 10 வயதுடைய அல்லது 10 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் மட்டுமேயாகும்.

7. விண்ணப்பப்படிவத்தை மிகவும் சரியாக பூர்த்தி செய்தல் வேண்டும்.

7.1 விண்ணப்பப்படிவங்களை தரவேற்றம் செய்யும் இறுதித்தினமான 2023.07.06 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு நிகழ்நிலை முறைமை மூடப்பட்ட பின்னர் விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்களை எக்காரணத்திற்காகவேனும் மாற்றம் செய்ய முடியாது என்பதால் முதற்தடவையிலேயே சரியாக தகவல்கள் தரவேற்றம் செய்வது அதிபரினதும் பொறுப்பாசிரியரினதும் பொறுப்பாகும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

7.2 தரவேற்றம் செய்த பின்னர் விண்ணப்பப்படிவத்தை தரவிறக்கம் செய்யும் போது பெறப்படும் PDF படிவத்தை Excel Sheet உடன் ஒப்பிட்டு ஒவ்வொரு விண்ணப்பதாரியினதும் தகவல்களை தனித்தனியாக சரிபார்த்து அவ் PDF படிவத்தில் மட்டும் விண்ணப்பதாரியினதும் பெற்றோர்களினதும் கையொப்பத்தைப் பெற்று பாடசாலையில் பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும். (Excel Sheet இல் கையொப்பம் பெறலாகாது.)

7.3 **அதில் முழுப்பெயர், பிறந்த திகதி, மொழிமூலம், ஆண்/பெண் பால், வருமானம் ஆகிய சகல விவரங்களும் சரியாக உள்ளடக்கப்பட்டுள்ளனவா என சரிபார்த்து உறுதிப்படுத்துமாறு பெற்றோர் /பாதுகாவலருக்கு அறிவுறுத்தல் வழங்க வேண்டும்.**

8. கடந்த முறை உங்கள் பாடசாலை விண்ணப்பதாரிகள் தோற்றவுள்ள பரீட்சை நிலையத்தை விட மிகவும் வசதியான நிலையமிருப்பின் அதனை மாற்றஞ் செய்வதற்கு வலயக் கல்விப் பணிப்பாளருக்கு வேண்டுகோள் ஒன்றை சமர்ப்பிக்கவும்.

உங்களுடைய பாடசாலையிலிருந்து பார்வைக் குறைபாடு / கேட்டற் குறைபாடு மற்றும் வேறு விசேட தேவைகளுடைய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பதாயின் அவர்களுக்காக விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களுக்காக இணைப்பில் (Link) வழங்கப்பட்டுள்ள விவரங்களைப் பூர்த்தி செய்தல் வேண்டும். விசேட கல்வித் தேவையுடைய பரீட்சார்த்திகளுக்காக,

- இரத்மலானை கண்பார்வையற்றோர் பாடசாலை, இரத்மலானை
- பொலம்மாறுவ கண்பார்வையற்ற / செவிப்புலனற்றோர் பாடசாலை, தங்காலை
- கைதடி நபீல்ட், கைதடி

வேறு பொருத்தமான இடங்களிலும் விசேட பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படுமாகையால் அந்நிலையத்தில் தோற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற விண்ணப்பதாரிகள் தொடர்பாக கவனஞ் செலுத்தப்படும்.

9.1 பரீட்சார்த்தி ஒருவர் மாணவர் உதவிப் பணம் பெற எதிர்பார்த்திருப்பின் தகைமைகளுக்கு மேலதிகமாக அவரது பெற்றோர்/சட்டரீதியான பாதுகாவலர் எல்லா வழிகளிலும் **வருடத்துக்கு ரூபா 180,000.00** அல்லது அதற்குக் குறைவான வருமானத்தை பெறுபவராயிருத்தல் வேண்டும்.

9.2 அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் “சமுர்த்தி” வேலைத்திட்டத்தினால் பெறப்படும் உதவிப் பணம், வருமான எல்லையைக் கணிக்கும்போது கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

9.3 இத் தகைமையை உறுதிப்படுத்துவதற்காக வருடாந்த மொத்த வருமானம் தொடர்பாக உங்களால் பிரதேச செயலாளருக்கு வருமானம் கூடவோ குறைவோ எனக் குறிப்பிட்டு அனுப்பப்பட்டு மீண்டும் நீங்கள் பெற்றுக்கொள்ளும் ஆவணங்களுக்கமைய செயற்படுவதோடு அவ் ஆவணத்தைப் பாதுப்பாக கோவைப்படுத்த வேண்டும்.

9.4 பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய மாணவர் உதவிப் பணம் பெறுவதற்கு தகைமை பெறின் மீண்டும் வருமானத்தை உறுதிப்படுத்தத் தேவையில்லை.

9.5 பெற்றோரின் அல்லது சட்டரீதியான பாதுகாவலரின் வருமானத்தைப் பிழையின்றிக் குறிப்பிடுதல் பாடசாலை அதிபரின் பொறுப்பாகும்.

❖ இது தொடர்பாக வழங்கப்படும் வேண்டுகோள்களை ஏற்றுக்கொள்ள முடியாதென்பதனால் வருமான மட்டம் தொடர்பான தகவல்களை பெற்றோர் மூலம் உறுதிப்படுத்துவது மிகவும் முக்கியமானது.

10. தற்போது தரம் 5இல் கற்கின்ற 2013.02.01 தொடக்கம் 2014.01.31 வரையுள்ள காலப்பகுதிக்குள் பிறந்த வருமானம் குறைந்த மாணவர்களுக்காக மட்டுமே என பெற்றோர், சட்டரீதியான பாதுகாவலர்களுக்கு முற்கூட்டியே அறியத்தரவும். இது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தாலோ கல்விச் செயலாளராலோ வெளியிடப்படும் நிபந்தனைகள் செல்லுபடியாகும் என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

11. மேற்படி விடயங்கள் தொடர்பாக மேலதிக விவரங்கள் பெற விரும்பின் கீழே தரப்படும் தொலைபேசி இலங்களூடாக தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| தொலைபேசி இலக்கம் | : 011-2784537 / 011-2786616 / 011-2784208 |
| தொலைநகல் இலக்கம் | : 011-2784422 |
| மின்னஞ்சல் முகவரி | : gr5schexam@gmail.com |

எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கை பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

පාසල්වලට සිසුන් තෝරා ගැනීමට හා ශිෂ්‍යාධාර ප්‍රදානය කිරීමට
5 ශ්‍රේණියේ සිසුන් සඳහා පැවැත්වෙන විභාගය
பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும்
மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக 5 ஆம்
தர மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை

# ව්‍යවස්ථාව
## பிரமாணங்கள்
# 2023

## இலங்கை பரீட்சைகள் திணைக்களம்

# பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாக 5 ஆம் தர மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை

# பிரமாணங்கள்

சகல பாடசாலை அதிபர்களுக்கும்,

## 1.0 அறிமுகம்

1.1 இப் பரீட்சை "பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக 5ஆம்தர மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை" என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

1.2 அரசாங்கத்தினால் வரையறுக்கப்பட்ட குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு மாவட்ட அடிப்படையில் உதவிப் பணத்தை வழங்குவதற்கும் மேலும், சிறந்த வசதிகளைக் கொண்டிருக்கின்ற தேசிய பாடசாலைகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கும் இப்பரீட்சையிலே கிடைக்கப்பெற்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையாகக் கொள்ளப்படும்.

1.3 இப்பிரமாணங்கள் 1995 இலும் அதன் பின்னரும் நடாத்தப்படும் பரீட்சைகளுக்கு நடைமுறைப்படுத்தப்படும்.

1.4 **இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமையுடைய மாணவர்கள் உள்ள சகல பாடசாலைகளின் அதிபர்களும் இப் பிரமாணங்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுதல் வேண்டும்.**

1.5 இப் பரீட்சை தொடர்பாக அறிய விரும்பும் பெற்றோர்களுக்கும் பாதுகாவலர்களுக்கும் இப்பிரமாணங்கள் கொடுக்கப்படல் வேண்டும். தேவைப்பட்டால், பிரமாணங்கள் அவர்களுக்குத் தெளிவாக விளக்கப்படல் வேண்டும்.

1.6 இப்பரீட்சையின் பிரகாரம் உதவிப் பணம் வழங்குவதற்காக தெரிவு செய்யப்படும் மாணவர்கள் இப் பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளை நிறைவேற்றுவதை நீங்கள் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

## 2.0 நோக்கங்கள்

2.1 ரூபா 180,000.00 அல்லது அதற்கும் குறைந்த வருடாந்த வருமானத்தையுடைய பெற்றோர்களின்/சட்டரீதியான பாதுகாவலர்களின் பிள்ளைகளுக்கு உதவிப் பணத்தை வழங்குதல்

2.2 தெரிவு செய்த பாடசாலைகளில் 6 ஆம் தரத்திற்கு மாணவர்களை அனுமதித்தல்

மேற்குறிப்பிட்ட நோக்கங்களை அடையும் நோக்கத்துடன் இப்பரீட்சை 5 ஆம் தர மாணவர்களுக்காக நடாத்தப்படுகிறது. இப்பரீட்சையிலே சித்திகள் ஏதும் தீர்மானிக்கப்படமாட்டாது.

## 3.0 தகைமைகள்

3.1 இப்பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும், இலங்கையராக இருத்தல் வேண்டும்.

3.2 விண்ணப்பத்தை அனுப்பும் சமயத்திலே அரசாங்கப் பாடசாலைக்கோ அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைக்கோ செல்லும் 5ம் தரத்தில் பயிலும் மாணவராக இருத்தல் வேண்டும். அவ்வாறாயினும் 2.1 இன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள மாணவர் உதவிப்பணம் பெற்றுக்கொள்வதற்கு தகுதியுடையவர் 2024 ஜனவரி 31 ஆம் தினத்தில் 11 வயதுக்கு குறைந்த அல்லது 10 வயதுடைய அல்லது 10 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் மட்டுமேயாகும்.

3.3 எக்காரணத்திற்காகவேனும் தரம் 5 இல் கல்வி பயிலும் மாணவர்கள் எவரேனும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்காதவிடத்து அப் பொறுப்பை அதிபரிடம் வழங்குவதுடன், சட்ட ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 4.0 உதவிப் பணம் வழங்குதல்

4.1 பரீட்சார்த்தி ஒருவர் மாணவர் உதவிப் பணம் பெற விரும்பினால் மேலே 3.0 இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளுக்கு மேலதிகமாக அவரது பெற்றோர்/சட்டரீதியான பாதுகாவலர் எல்லா வழிகளிலும் வருடத்துக்கு ரூபா 180,000.00 அல்லது அதற்குக் குறைவான வருமானத்தை பெறுபவராயிருத்தல் வேண்டும்.

4.2 அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் "சமூர்த்தி" வேலைத்திட்டத்தினால் பெறப்படும் உதவிப் பணம், வருமான எல்லையைக் கணிக்கும்போது கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

4.3 இத் தகைமையை வருடாந்த மொத்த வருமானம் தொடர்பாக உறுதிப்படுத்துவதற்காக பிரதேச செயலாளருக்கு வருமானம் கூடவோ குறைவோ என்பதைக் குறிப்பிட்டு அனுப்பி மீண்டும் நீங்கள் பெற்றுக்கொள்ளும் ஆவணங்களுக்கமைய செயற்படுவதோடு அவ் ஆவணத்தைப் பாதுப்பாக கோவைப்படுத்தப்பட வேண்டும்.

4.4 பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய மாணவர் உதவிப் பணம் பெறுவதற்கு தகைமை பெறின் மீண்டும் வருமானத்தை உறுதிப்படுத்தத் தேவையில்லை.

4.5 **பெற்றோரின் அல்லது சட்டரீதியான பாதுகாவலரின் வருமானத்தைப் பிழையின்றிக் குறிப்பிடுதல் பாடசாலை அதிபரின் பொறுப்பாகும்.**

- ❖ பரீட்சார்த்திகளின் பெயர், வருமான விபரம் என்பவற்றைச் சரிபார்த்து அவை சரியானவை என்று உறுதிப்படுத்துவதற்கு பெற்றோர் அல்லது சட்ட ரீதியான பாதுகாவலர் விண்ணப்பத்தில் உரிய கூட்டினுள் கையொப்பமிடப்படல் வேண்டும். கையொப்பமிட்டு உறுதிப்படுத்தப்படாதவிடத்து பரீட்சார்த்திகளுக்கு ஏற்படும் சிரமங்களுக்கு அவர்களே பொறுப்பாளிகளாவர்.

| |
|---|
| **வருமான நிரல் வெற்றிடமாக இருத்தல் கூடாது.**<br><br>**வருமானம் 180,000.00 அதிகமாயின் "அதிகம்" என்றும் 180,000.00 வருமானம் குறைவாயின் "குறைவு" என்றும் வருமானத்தைக் குறிக்கும் நிரலில் குறிப்பிடவும். இந் நிரலைக் கவனயீனமாக பூரணப்படுத்துவதன் காரணமாக எந்தவொரு மாணவனுக்காவது புலமைப்பரிசில் கிடைக்கப் பெறாவிடின் அதற்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவும்.** |

## 5.0 உதவிப் பணத்தை வழங்கும் முறை

5.1 இப் பிரமாணங்களின் பிரகாரம் தகைமை பெற்று, இப்பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் உதவிப்பணம் பெறுவதற்காகத் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு 6 ஆம் தரம் தொடக்கம் 13 ஆம் தரம் வரை உதவிப்பணம் வழங்கப்படும்.

5.2 பாடசாலைகளில் விடுதி வசதியிருப்பின் அங்குள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படும் போது உதவிப்பணம் பெறுபவர்களுக்கு முதலிடம் வழங்கப்படும்.

## 6.0 உதவிப்பணம் வழங்கப்படும் காலவரையறை

6.1 ஆரம்பத்தில் இக்காலவரையறை 6 வருடங்களுக்குக் மட்டுப்படுத்தப்படும்.

6.2 இந்த ஆறு ஆண்டு காலத்தின்போது உதவிப்பணம் பெறும் மாணவன்/மாணவி தொடர்ச்சியாக க.பொ.த. (சா.தர) வரை கற்ற பின்னர் க.பொ.த. (சா.தர)ப் பரீட்சைக்குத் தோற்றிய முதற் தடவையில் க.பொ.த. (உ.த) வகுப்பிற்கு அனுமதிக்கப்படுவதற்கு அவசியமான பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டால் மட்டுமே உதவிப்பணத்தை மேலும் தொடருவது கருத்திற் கொள்ளப்படும்.

6.3 இவ்வாறு தொடரப்படும் உதவிப்பணம் க.பொ.த(உ.தர) வகுப்பிற்குப் பிரவேசித்த நாள் தொடக்கம் இரண்டு வருடங்களுக்கு வழங்கப்படும்.

6.4 உதவிப்பணம் பெறும் மாணவர்கள் அவர்களால் பின்பற்றப்படவேண்டிய நிபந்தனைகள் பற்றி உதவிப்பணம் பெறும்போது அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய நிபந்தனைகள் திட்ட வட்டமாகப் பின்பற்றப்படவேண்டியமை மிகவும் முக்கியமானதாகும்.

## 7.0 பரீட்சைச் செயன்முறை

7.1 ஒரே நாளில் நடைபெறும் இப்பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டுள்ளது.

வினாப்பத்திரம் I (1 மணித்தியாலம்)

வினாப்பத்திரம் II (1.15 மணித்தியாலம்)

- ➢ வினாப்பத்திரம் I :- மாணவர்களின் கற்கும் திறனை மதிப்பீடு செய்வதற்கு பொருத்தமான வினாக்கள் இதில் அடங்கும்.
- ➢ வினாப்பத்திரம் II :- 1ஆம் தரம் தொடக்கம் 5 ஆம் தரம் இரண்டாம் தவணை வரையுள்ள சகல பாடத்திட்டங்களையும் உள்ளடக்கியதாக இவ் வினாக்கள் அமையும்.

7.2 I. பரீட்சார்த்திகள் வினாத்தாளிலேயே வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

II. அவர்கள் வினாத்தாளில் தமது சுட்டெண்ணை மாத்திரமே எழுதுதல் வேண்டும்.
III. தமது பெயரையோ, பாடசாலைப் பெயரையோ எழுதுதல் ஆகாது.
IV. விடைகளை எழுதுவதற்கு நீல/கறுப்பு பேனையோ அல்லது பென்சிலையோ பயன்படுத்தல் வேண்டும்.
V. பென்சிலால் விடையளிப்பதாயின் தெளிவாக எழுதக்கூடிய பென்சிலை பயன்படுத்துவதற்கு பரீட்சார்த்திகளுக்கு அறிவுறுத்தவும்.

❖ பாடசாலை அதிபர்கள் இவ் அறிவுறுத்தல்களை தமது பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கு விளக்கி இவை தொடர்பான பயிற்சியை அவர்களுக்கு அளித்தல் வேண்டும்.

## 8.0 பரீட்சை நடாத்தப்படும் திகதி

இப் பரீட்சை ஓகஸ்ட் மாதத்திலேயே நடாத்தப்படுகின்றது. ஆயினும் இவ்வருடம் ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி நடாத்தப்படும்.

## 9.0 பரீட்சைக்குத் தோற்றுதல்

9.1 நிகழ்நிலை முறைமையில் (Online) விண்ணப்பிப்பதற்கு அறிவுறுத்தல்களும் பிரமாணங்களும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. உரிய அறிவுறுத்தல்கள், பிரமாணங்கள் கிடைக்கப்பெறாவிடின் பரீட்சைகள் ஆணையாளர், பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

9.2 மேலே 3ஆம் பந்தியின் பிரகாரம் தகைமைகள் அனைத்தையும் நிறைவேற்றிய அனைத்து மாணவர்களையும் இப்பரீட்சைக்கு அனுமதித்தல் அதிபரது பொறுப்பாகும். தோற்றவுள்ள சகல மாணவர்களுக்கும் பரீட்சை நடைபெறும் திகதி, நேரம் என்பன பற்றி முற்கூட்டியே அறிவித்தல் அவசியமானது.

9.3 மாணவர்களின் பிறப்புச் சான்றிதழுக்கமைய பெயரும், பிறந்த திகதியும் அதிபரினால் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படல் வேண்டும்.

9.4 அச்சுப்பிரதியெடுத்த இரண்டு பிரதிகளில் விண்ணப்பதாரி, பெற்றோர்/ பாதுகாவலர் வழங்கிய தகவல்கள் சரியானவையா என உறுதிசெய்து கையொப்பமிட்டு ஒரு பிரதியை பாடசாலையில் வைத்துக் கொண்டு மற்றைய பிரதியை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**அதில் முழுப்பெயர், பிறந்த திகதி, மொழிமூலம், வருமானம் சரியாக உள்ளடக்கப்பட்டுள்ளனவா என சரிபார்த்து பெற்றோர்/ பாதுகாவலருக்கு அறிவுறுத்துக. இவ்விவரங்களை சரியாக உள்ளடக்குவது அதிபரின் முழுமையான பொறுப்பாகும்.**

## 10.0 வரவு இடாப்பு

பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரிகளின் பரீட்சை சுட்டெண் உட்பட முழு விவரங்களடங்கிய வரவு இடாப்பு பரீட்சைக்கு முன்னர் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

## 11.0 பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்

11.1 மாணவர்களின் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காகவும் ஆள்மாறாட்டம் அல்லது வேறு பிரச்சினைகளுக்கு இடமளிக்காதிருப்பதற்காகவும் அதிபர் அல்லது அவரால் நியமிக்கப்படும் பொறுப்பான ஆசிரியர் ஒருவர் மாணவர்களுடன் பரீட்சை மண்டபத்துக்கு அழைத்து வந்து, மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

11.2 ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் வழங்கப்பட்டுள்ள ஆசனங்களில் அவர்கள் அமருவதற்கு மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் மாணவர்களைக் கொண்டுவரும் ஆசிரியரின் பொறுப்பாகும்.

11.3 எனினும் வினாத்தாள்கள் வழங்கப்பட முன்பு அவர் பரீட்சை நிலையத்தை விட்டுச் செல்லல் வேண்டும்.

11.4 இதற்காக அதிபருக்கு அல்லது வருகைதரும் பொறுப்பான ஆசிரியருக்கு அரசாங்க நிதிப்பிரமாணங்களுக்கு அமைவாக விசேட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

11.5 விசேட கொடுப்பனவுக் கோரிக்கையைச் சமர்ப்பிக்கும் போது அதில் அவர் மாணவர்களுடன் பரீட்சை நிலையத்திற்கு வந்தார் என்று மேற்பார்வையாளர் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

11.6 தமது பிள்ளைகள் இப்பரீட்சைக்குத் தோற்றுவாராயின் மாணவர்களை அழைத்துவரும் பணியை மேற்கொள்ளக் கூடாது.

11.7 மாணவர்களை ஆசனங்களில் அமர்த்தும்போது மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். மாணவர்களைச் சரியான சுட்டெண் கொண்ட உரிய ஆசனங்களில் அமர்த்துவது மாணவர்களைக் அழைத்துச் செல்லும் அதிபர்களின்/ஆசிரியர்களின் பொறுப்பாகும்.

## 12.0 பெறுபேறுகளின் வெளியீடும் பாடசாலைகளைப் பெற்றுக் கொடுத்தலும்

12.1 பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் சகல பரீட்சார்த்திகளுக்கும் வெளியிடப்படும் பெறுபேறுகளின் பிரகாரம் கல்வி அமைச்சின் செயலாளரால் உதவிப் பணத்தை வழங்குவதற்காகவும் , கோரப்பட்ட பாடசாலைக்கு அனுமதி வழங்குவதற்காகவும் பரீட்சார்த்திகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

12.2 அவ்வாறு தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகளுக்கு கல்வி அமைச்சு செயலாளரினால் பாடசாலை அதிபரூடாக அது தொடர்பாக அறிவிக்கப்படும்.

12.3 விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் தகைமையுடைய பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் பாடசாலை அதிபரினால் கல்வி அமைச்சின் பாடசாலை நடவடிக்கைகள் கிளையின் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

12.4 பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேலாகப் புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளுக்கு பெற்றோரின் வேண்டுகோளின் அடிப்படையில் கல்வி அமைச்சின் செயலாளரினால் பரீட்சார்த்திகளுக்கு பாடசாலைகள் ஒதுக்கப்படும்.

12.5 உதவிப்பணம் வழங்குவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தியொருவர் இங்கு 3 ஆம் 4 ஆம் பந்திகளின் பிரகாரம் தகைமையற்றவர் என்று பின்பு கண்டுபிடிக்கப்பட்டால் அத்தகைய தேர்வு இரத்துச் செய்யப்படும்.

12.6 உதவிப் பணத்தைப் பெறுவதற்கான தகைமையை நிரூபிக்கும்படி கல்வி அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அம் மாணவர்களின் தகைமையை இங்கு 4.0 இல் தரப்பட்டுள்ள பிரமாணங்களுக்கமைய உதவிப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கான தகைமைகளை உறுதிப்படுத்துவதற்குரிய பத்திரங்களை மாணவனுக்கு ஒதுக்கப்பட்ட பாடசாலை அமைந்துள்ள பிராந்தியத்தின் மாகாண கல்விப் பணிப்பாளர்/வலயக்/கோட்டக் கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

## 13.0 வயது, வருமானம் என்பவற்றை உறுதிப்படுத்தல்

13.1 பதிவாளர் நாயகத்தினால் அல்லது மாவட்டப் பதிவாளரினால் வழங்கப்பட்ட பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அல்லது வயதை அத்தாட்சிப்படுத்தும் பத்திரம் (ஒரு மாணவரின் பிறப்புப்பதிவு செய்யப்படவில்லையெனின் பெற்றோர் / பாதுகாவலர் ஒரு சத்தியக் கடதாசியைச் சமர்ப்பித்தல் வேண்டும்).

13.2 அச்சத்தியக் கடதாசி, அம்மாணவரின் பிறப்பு பதிவு செய்யப்படவில்லை எனவும் அவருடைய பிறப்பைப் பதிவு செய்து, ஒரு பிறப்பு அல்லது வயது அத்தாட்சிப் பத்திரத்தை பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது எனவும் பெற்றோருக்கு/பாதுகாவலருக்கு தெரிந்த அளவில் அம்மாணவர் குறித்த திகதியில் குறித்த இடத்தில் பிறந்தார் என்றும் கூறும் உறுதிக் கூற்றுக்களை அடக்கியிருத்தல் வேண்டும்.

13.3 சத்தியக் கடதாசிகள் தற்காலிகமாகவே ஏற்றுக் கொள்ளப்படுகின்றன என்பதை பெற்றோர்/ பாதுகாவலர் அறியத்தரல் வேண்டும். பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அல்லது வயது அத்தாட்சிப் பத்திரம் கிடைத்தவுடன் அது அனுப்பி வைக்கப்படல் வேண்டும்

13.4 இப் பிரமாணங்களின் 3.0 ஆம் பந்திப் பிரகாரம் பரீட்சார்த்தி தோற்றிய பாடசாலையின் அதிபரிடமிருந்து பெற்றதொரு அத்தாட்சிப் பத்திரம்.

13.5 இப்பிரமாணங்களின் 4.0 ஆம் பந்திப் பிரகாரம், பெற்றோர்/சட்டரீதியான பாதுகாவலரின் மொத்த வருடாந்த வருமானம் தொடர்பாக உதவி அரசாங்க அதிபரிடமிருந்து பெறப்பட்ட அத்தாட்சிப்பத்திரம். (இவ் ஆவணம் உதவிப்பணத்திற்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு உரியது)

## 14.0 ஏனைய விபரங்கள்

இப் பிரமாணங்களின் ஏற்பாடுகளிலே குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பான தீர்மானங்கள் (தேவைப்படின் கல்வி அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்துடன்) பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும்.

எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

2023 ஜூன் 14 ஆம் திகதி
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை
இலங்கை பரீட்சைகள் திணைக்களம்
பெலவத்த, பத்தரமுல்ல.